**III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE**
**O.S. NO.34/2014**

**Deposition of witness for the Plaintiff/PW2**

**Respondent solemnly by Tmt. Shanthi, Assistant**
**in accordance with the provision of Act I for 1873 on 29-11-2017**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:Tr.Narayanamoorthy** | **Caste :** | |
| **Father's/Husband's Name** | **:Tr.Govindarajulu Naidu** | **Calling :** | |
| **Age** | **:** | **Religion :** | |
| **Village** | **:** | **Taluk :** | |

குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் 4 முதல் 6 தரப்பில்- முதல் வாதி சுலோசனா என்னுடன் பிறந்த அக்கா ஆவார். இந்த வழக்கு தாக்கல செய்வதற்கு உண்டான ஆவணங்களை பெற்றுத் தந்ததில் நான் ஒருவர் என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு மகன் உள்ளார். வழக்கு தாக்கல் செய்த முதல் இன்றைய தேதி வரை ஒவ்வொரு வாய்தாவிற்கும் நான் நீதிமன்றத்திற்கு வருகிறேன் என்றாலும் சுலோச்சனாவை குறுக்கு விசாரணை செய்த தேதியில் மட்டும் நான் நீதிமன்றத்திற்கு வெளியே நின்றிருந்தாலும் சரிதான். சுலோச்சனா எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்றும் அவர் போட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். நெருங்கிய உறவினர் என்பதால் வாதி, பிரதிவாதிகளிடையே உள்ள குடும்ப விவரங்கள் தெரியும் என்றால் 90 சதவீதத்திற்கு தெரியும். சுப்பையாநாயுடுவின் அப்பா பெயர் வெங்கடசாமி நாயுடு என்றால் சரிதான். வெங்கடசாமி நாயுடுவின் முதல் மனைவி மகன்கள் தான் ஆதிநாராயணசாமி நாயுடு, மற்றும் சுப்பையா நாயுடு என்று சொன்னால் சரிதான். வெங்கடசாமி நாயுடு 2வது திருமணம செய்து அவருடைய மகன்களை விட்டு தனியே போய்விட்டார் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வெங்கடசாமி நாயுடுவின் 2வது மனைவவிக்கு பிறந்த மகளின் மகன் நான் என்றால் சரிதான். இந்த வகையில்தான் சுப்பையா நாயுடுவை என்னுடைய தாய் மாமன் என்று சொல்கிறேன் என்றால்சரிதான். நான் எஸ்எஸ்எல்சி வரை படித்துள்ளேன். 1988வரை சென்னையில் உள்ள குமார் எலெக்ட்ரிகல்ஸில் வேலை பார்த்தேன் என்றால் 1981 வரை வேலை பார்த்தேன். 1988 வரை அங்கு வேலை பார்த்துவிட்டு, பின்னிட்டு சக்ரா லாரி டிரான்ஸ்போர்ட்டில் மணல், ஜல்லி வியாபாரம் செய்து வந்தேன் என்று சொன்னால், 1981 வரை எலெக்ட்ரிகல்ஸில் வேலை பார்த்த பிறகு 1981ல் தாமோரன் இறந்துவிட்டார். அப்போது சுப்பையா நாயுடு வியாபாரத்தை கவனிக்க சொன்னார். அதன்

படி 1986 வரை வியாபாரத்தை கவனித்து வந்தேன். அதன் பிறகு என்னுடைய நண்பர்கள் 7 பேர் சேர்ந்து ஒரு லாரியை போட்டு சக்ரா டிரான்ஸ்போர்ட் நடத்தி வந்தார்கள். அதில் நான் பார்ட்னராக வேலை பார்த்தேன். சக்ரா டிரான்ஸ்போர்ட்டில் 1996 வரை இருந்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1981 முதல் சப்பையா நாயுடு குடும்பத்தில் அவர் வியாபாரத்தை கவனித்துக் கொள்ள அருகில் இருக்குமாறு சொன்னார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதியின் கணவர் தாமோதரன் இறந்த பிறகு 1981 முதல் அவர் குடும்பத்துடன் இருக்கும்படி சப்பையா நாயுடு சொன்னதின் பேரில் இருந்து வந்தேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 30/12/1981ல் முதல் வாதியின் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1981ல் முதல் வாதியின் குடும்பத்துடன் வந்துவிட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றாலும், அதேபோல் தாமோதரன் இறந்த பிறகு தான் முதல் வாதியின் குடும்பத்துடன் வந்து விட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 30/12/1981ல் தாமோதரன் இறந்த பிறகு அடுத்த நாளே என்னிடம் சப்பையா நாயுடு தாமோதரன் குடும்பத்தை பார்த்துக் கொள்ள சொன்னார். 1992 க்கு பிறகு ஸ்ரீ விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற செங்கல் சூளையில் நான் கணக்கு பிள்ளையாக வேலை பார்த்தேனா என்றால், சரியல்ல. 1981 முதல் 2004 வரை நான் பார்த்து வந்தேன். சப்பையா நாயுடுவிற்கு 2 சூளைகள் இருந்தது. அந்த 2 சூளையும் நான் தான் கணக்கு பிள்ளையாக பார்த்து வந்தேன். 2004 வரை பார்த்து வந்த கட்டத்தில் பணக் கையாடல் காரணமாக அவ்வப்போது என்னை எடுத்துவிடுவார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1981ற்கு பிறகு சப்பையா நாயுடுவின் குடும்பத்துடன் சேர்ந்து கணக்கு வழக்குகளை பார்த்து வந்தேன் என்று சொல்வது தவறு என்றாலும் 1988 க்கு பிறகு தான் அவ்வாறான கணக்கு வழக்குகளை பார்த்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற நிறுவனம் ஆதிநாராயணசாமி நாயுடுவின் மகன் பாபுநாயுடு மற்றும் சப்பையா நாயுடு கூட்டாக தொடங்கிய வியாபாரம் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. ஸ்ரீ விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற நிறுவனம் ஒரு பங்குதாரர் நிறுவனம் என்பது தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. ஏ பட்டியல் சொத்து அயிட்டம் 13 மற்றும் 14 அரோபோல் டி பட்டியல் சொத்தில் அயிட்டம் 5 கண்டுள்ள சொத்துக்கள் தற்போதும் ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற பெயரில் தான்கிரையப் பத்திரம் இருந்து வருகிறது என்று சொன்னால் அதை பற்றி தெரியாது. ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற கூட்டாண்மை நிறுவனம் ஏ பட்டியல் சொத்தில்அயிட்டம் 1 முதல் 6 மற்றும் 12 ல் தான் நடந்து வந்தது என்று சொன்னால் மேற்சொன்ன

சொத்துக்களை தவிர அயனம்பாக்கத்தில் இருந்த வேறு சொத்துக்களிலும் தான் நடந்தது. 1978ல் ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ் நிறுவனத்திலிருந்து பாபு நாயுடு விலகிச் சென்று விட்டார் என்று சொன்னால் இருக்கலாம் அதைப்பற்றி தெரியாது. 1978க்கு பிறகு ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் சுப்பையா நாயுடு என்று சொன்னால் 1978 முதல் இன்றைய தேதி வரை அவர் தான் உரிமையாளார். 1979ல் சுப்பையா நாயுடு அவருடைய நான்கு மகன்களையும் ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக சேர்த்துக் கொண்டார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு பங்குதாரர்களாக சேர்த்துக் கொண்டதற்குண்டான ஆவணம் தான் பி.சா.ஆ1 முதல் 3 ஆக சுலோச்சனாவை விசாரித்த பிறகு தான் குறியீடு செய்யப்பட்டது என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 மற்றும் 2 ஐ பற்றி எனக்கு தெரியுமா என்றால் நான் சேம்பரில் கல்லு போடுவது, வேலை செய்யும் ஆட்களை பற்றி கணக்கு வழக்குகள் எழுதுவது அதை தான் பார்த்துக் கொண்டேன் அவருடைய குடும்ப விவரங்களை பற்றி எனக்கு தெரியாது. குடும்ப விவரங்கள் பற்றி தெரியாது என்ற பட்சத்தில் அவருடைய குடும்பத்தில் வாங்கிய சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. சொத்து வாங்கிய விவரங்கள் எனக்கு தெரியும் அவருடைய குடும்பத்தில் தான் இருந்து வந்தேன் அதனால் தான் தெரியும். வருமான வரி கணக்கு வழக்குகள் தாக்கல் செய்வது நான் தான் என்றால் சரியல்ல. அதற்கு தனியாக ஆள் வைத்திருந்தார்கள். ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ் என்ற நிறுவனத்தின் பெயரில் தனியாக வருமான வரி கணக்கு இருந்ததா இல்லையா என்றால் இருந்தது. அது எனக்கு தெரியும். சுப்பையா நாயுடுவின் இந்து கூட்டுக் குடும்பம் என்கிற பெயரில் வருமான வரி கணக்கு தனியாக இருந்தது கிடையாது என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. சுப்பையா நாயுடு அவருடைய மகன்களை பங்குதாரர்களாக சேர்த்து பங்குதாரர்நிறுவனமாக நடத்தி வந்தபோது அவருக்கு 50% வருமானத்தில் பங்கு என்றும் மீதமுள்ள 4 மகன்களுக்கு ஆளுக்கு 12.50% பங்கு என்ற கணக்கில் நடத்தி வந்தார் என்றால் அவ்வாறு எதுவும் கிடையாது. சுப்பையா நாயுடுவின் 4 மகன்களும் 1978 முதல் அவர்கள் பெயரில் தனித்தனியாக வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னுடையமாமா தாமோதரன் 1978 முதல் தனித்தனியாக வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு சுப்பையா நாயுடு மற்றும் அவரது 4 மகன்களும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்த படசத்தில் அவர்கள் தனித்தனியாக ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸிலிருந்து கிடைக்கும் வருமானத்தை தனித்தனியாக கணக்கு காண்பித்துள்ளார்கள் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 1993 முதல் 2009 வரை கோவிந்தசாமி நாயுடு

இறக்கும் வரை ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து வந்த வருமானத்தை எல்லா பிள்ளைகளுக்கும் மற்றும் அவருடைய வாரிசுகளுக்கும் பிரித்துக் கொடுத்த விவரம் எனக்கு தெரியாதுஎன்று சொன்னால் அவ்வாறு பிரித்துக் கொடுக்கவில்லை. நான் வெறும் கணக்குப் பிள்ளை என்றாலும் அதனால்அவருடைய குடும்ப விவகாரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சுப்பையா நாயுடு இறந்த பிறகும் அவருடைய மகன்கள் இறந்த பிறகும் அவருடைய வாரிசுதாரர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு 2009 வரை ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற கூட்டாண்மை நிறுவனம் நடத்தப்பட்டு வந்தது என்று சொன்னால் அவ்வாறு எதுவும் கிடையாது. சுப்பையாநாயுடுவின் 2 மகன்களான கோவிந்தசாமி நாயுடுவும் பக்தவட்சல நாயுடுவும் தமிழ்நாடு பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் என்றகூட்டாண்மை நிறுவனத்தை நடத்தி வந்தார்கள் என்று சொன்னால் பாபு நாயுடு தான் நடத்தி வந்தார். அந்த நிறுவனத்திற்கு இவர்கள் இருவரும் போய் வந்தார்கள். அமைந்தகரையில் 'எப்' சொத்தில் கிருஷ்ணகுமார் லாரிசர்வீஸ் என்ற நிறுவனத்தை பாபு நாயுடு நடத்தி வந்தார் என்று சொன்னால் சரிதான். கிருஷ்ணகுமார் லாரி சர்வீஸை தான் பின்னிட்டு கோவிந்தசாமியும் பக்தவட்சல நாயுடுவும் கூட்டாக நடத்தி வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1980ல் காட்டுபாக்கத்தில் பக்தவட்சலமும் கோவிந்தசாமியும் கூட்டாக ஒரு பிளாஸ்டிக் கவர் தயாரிக்கும் ஒரு நிறுவனத்தை கூட்டாக நடத்தி வந்த விவரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. சுப்பையா நாயுடு தான் ஆரம்பித்தார் நட்டத்தில் ஓடியதால் அதை அவரே மூடிவிட்டார். மேற்சொன்ன விவரம் பிராதிலும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் தற்போது கேள்வி கேட்கப்பட்டதால் அதன் விவரங்களை நான் சொல்கிறேன். 1980ல் பக்தவட்சலமும் கோவிநத் சாமி நாயுடுவும் 'சி' பட்டியல் சொத்தில் ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் என்று கூட்டாக ஆரம்பித்ததை பற்றி எனக்கு தெரிய வாய்ப்பில்லைஎன்று சொன்னால் சரியல்ல. அதையும் சுப்பையா நாயுடு தான் ஆரம்பித்தார். சாட்சி பிறகு சொல்கிறார் அதை சுப்பையா நாயுடு வாங்கினார் என்று. ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் என்ற நிறுவனத்தை சுப்பையாநாயுடு வாங்கினார் என்ற விவரம் பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 1975ல் கோவிந்தசாமிய நாயுடுவும் பக்தவட்சலமும் கூட்டாக சேர்ந்து அமைந்தகரையில் ஒரு கொடைக் கம்பெனி ஆரம்பித்த விவரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்தவிவரம் எனக்கு தெரியும். அந் கம்பெனியை 6 மாதத்திலேயே மூடிவிட்டார்கள். ஸ்ரீவிஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தில் பங்குதாரர்கள் என்ற முறை மட்டுமல்லாது கோவிந்தசாமியும் பக்தவட்சலமும் கூட்டாக வேறு தொழிலும் செய்து

வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 'பி' ஷெட்யூலில் உள்ள அயிட்டம் 33, 34, 36 முதலவ் 48 வரையிலான சொத்துக்களை பக்தவட்சலம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன சொத்துக்கள் வாங்கப்பட்ட நேரத்தில் ராமமூர்த்தி மற்றும் சுப்பையா நாயுடு உயிருடன் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். அதேபோல் 'பி' ஷெட்யூலில் உள்ள அயிட்டம் 1 முதல் 32, 35 மற்றும் 49 சொத்துக்களை மொத்தம் 58 ஏக்கர் 25 சென்ட் இடத்தினை கோவிந்தசாமி நாயுடு வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல அதையும் சுப்பையாநாயுடு தான் வாங்கினார் மேற்சொன்ன சொத்துக்களை வாங்கிய நேரத்தில் ராமமூர்த்தி மற்றும் சுப்பையா நாயுடு உயிருடன் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். 'பி' பட்டியல் சொத்துக்கள் அனைத்தும் கோவிந்த சாமி நாயுடுமற்றும் பக்தடவட்சல நாயுடு இறந்த பிறகு அவர்களுடைய வாரிசுதாரர்கள் தான் மேற்சென்ன சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் கோவிந்தசாமி நாயுடு மற்றும் பக்தவட்சல நாயுடு உயிருடன் இருந்த வரை கூட்டுக் குடும்பமாக அனுபவித்து வந்தார்கள். தற்போது அவர்களுடைய வாரிசுதாரர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள். 2009 முதல் கோவிந்த சாமி நாயுடு மற்றும் பக்தவட்சல நாயுடு வாரிசுதாரர்கள் அனுபவீத்து வருகிறார்கள் என்று சொன்னால் கோவிந்தசாமிநாயுடுவின் வாரிசுதாரர்கள மட்டும் தான் அனுபவித்து வருகிறார்கள்.

பிரதிவாதி தரப்பின் கேட்டுக் கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை பாதியில் நிறுத்தப்பட்டது.